## இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு,

# திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து !

### அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்!

இந்திய திருநாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஆண்டுதோறும் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்று (15.08.2024) சென்னையிலுள்ள முக்கிய திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சிகளில் சட்டப்பேரவை தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

| வ. எண் | திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி | கலந்து கொள்ளும் முக்கிய பிரமுகர்கள் |
|---|---|---|
| 1. | பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்<br>இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு<br>மேயர் பிரியா ராஜன் |
| 2. | மாதவப் பெருமாள் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை | சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு .<br>சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் |
| 3. | அனந்தபத்மநாப சுவாமி திருக்கோயில், அடையாறு, | நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு |
| 4. | கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், | ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி |
| 5. | மருந்தீசுவரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை | வேளாண்மை – உழவர்நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் |
| 6. | மகாலட்சுமி திருக்கோயில், பெசன்ட் நகர், சென்னை | வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் |
| 7. | வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை | நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு |
| 8. | தண்டீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி, சென்னை | சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி |
| 9. | திருவட்டீஸ்வரர் திருக்கோயில், திருவட்டீஸ்வரன் பேட்டை, | வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி |
| 10. | காளிகாம்பாள் திருக்கோயில், தம்புசெட்டித் தெரு, சென்னை | கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் |
| 11. | பாம்பன் சுவாமி திருக்கோயில், திருவான்மியூர், சென்னை | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் |
| 12. | குறுங்காலீஸ்வரர் திருக்கோயில், கோயம்பேடு, சென்னை. | தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் |
| 13. | கச்சாலீசுவரர் திருக்கோயில், அரண்மனைக்காரன் தெரு, சென்னை. | சமூகநலம் – மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் |
| 14. | தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை | மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் |
| 15. | காமாட்சி அம்மன் திருக்கோயில், மாங்காடு. | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் |
| 16. | ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில், சிந்தாதரிப்பேட்டை, சென்னை. | சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் |
| 17. | திருவல்லீஸ்வரர் திருக்கோயில் பாடி, சென்னை. | உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி |
| 18. | திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோயில், பூவிருந்தவல்லி | கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி |
| 19. | காரணீஸ்வரர் திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் |
| 20. | சக்தி விநாயகர் திருக்கோயில், கே.கே.நகர், சென்னை | வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி |
| 21. | அகத்தீஸ்வரர் திருக்கோயில், நுங்கம்பாக்கம், சென்னை | போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் |
| 22. | ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், அமைந்தகரை, சென்னை | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் |
| 23. | ஏகாம்பரேசுவரர் திருக்கோயில், தங்கசாலைத் தெரு, சென்னை. | சிறுபான்மையினர் நலன் – வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் |
| 24. | முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், | பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| 25. | செல்வ விநாயகர் மற்றும் கோதண்டராமர் திருக்கோயில், மேற்கு தாம்பரம், சென்னை | தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் |
| 26. | தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, | பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் |
| 27. | கந்தசாமி (எ) முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், பூங்கா நகர், | தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா |
| 28. | பாதாளபொன்னியம்மன் திருக்கோயில், கீழ்ப்பாக்கம், | வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன் |
| 29. | சென்னமல்லீஸ்வரர் மற்றும் சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில், சென்னை | ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் |
| 30. | அருணாச்சலேசுவரர் திருக்கோயில், பள்ளியப்பன் தெரு, சென்னை | சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி |
| 31. | சௌமிய தாமோதரப்பெருமாள் திருக்கோயில், வில்லிவாக்கம், | அரசு தலைமை கொறடா கோ.வி.செழியன். |

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.



சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நுங்கம்பாக்கம் நூர் வீராசாமி தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூர் வீராசாமி தெருவில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணியை தொடங்கி வைத்தார். அருகில் மாநகராட்சியின் பணிகள் நிலைக்குழுத் தலைவர் சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், பகுதிச் செயலாளர் அன்புதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் – உதயமலர் பாண்டியன் வரவேற்பில்

# திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – ஆர்.காந்தி திறந்து வைத்தார்கள்! திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக.15

திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். நகராட்சி மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

இதில் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே. என்.நேரு, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் மார்பளவு வெண்கலச் சிலையை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

அப்போது அமைச்சர் கே.என். நேரு அவர்கள் தெரிவிக்கையில், “தமிழ்நாட்டில் 25 மாநகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 490 நகராட்சிகள் பேரூராட்சிகள் 12,000க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் உயர்த்தப்பட்டு மாவட்ட ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் மொத்தம் இலட்சம் பேர் பயனடைந்து இருக்கிறார்கள். இதற்கு கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் நம்முடைய முதலமைச்சர் ஆண்டுதோறும் நகராட்சி நிர்வாகத்திற்கு ஆண்டுதோறும் 24 ஆயிரம் கோடி நகராட்சி துறைக்கு ஒதுக்கி தருகிறார்கள். நம் நகராட்சி நிர்வாகத்திற்காக முதலமைச்சர் அவர்கள் 75 கோடியே 22 லட்சம் மூன்று ஆண்டுகளில் முதலமைச்சர் வழங்கி இருக்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்திற்கு உள்ள நகராட்சி தேவையான பணிகளை நடவடிக்கை எடுக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்துதான் சென்னைக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து பூண்டி, புழல், முழுமையாக வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆவடி மாநகராட்சியைப் பொருத்த வரையில் மூன்று நான்கு வாரங்களில் முழுமையாக தண்ணீர் கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வார்டுகளில் கொடுப்பதற்கு கொஞ்சம் சிரமமாக உள்ளது. பொன்னேரி நகராட்சி உப்பு தண்ணீர்தான் வந்து கொண்டிருக்கிறது என சட்ட மன்ற உறுப்பினர் சொல்லி இருக்கிறார். அங்கிருக்கிற கடல் நீரை குடிநீராக வேண்டும் என்ற திட்டம் தீட்டப்பட்டு ஊரக வளர்ச்சி துறையின் மூலம் செயல்படுத்த உள்ளோம். திருவள்ளூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலையினை திறந்து வைப்பதில் எனக்கு தகுதி இல்லை. ஆனால் நான் ஒரு அடிமட்ட தொண்டன் என்பதால் இதை பாக்கியமாக கருதி திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தெரிவித்தார்

இதனைத் தொடர்ந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு இறந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு கூடுதல் தீருதவியாக ஆறு நபர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணையினை அமைச்சர்கள் கே.என். நேரு, ஆர்.காந்தி ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து திருவள்ளூர் நகராட்சி பகுதிகளில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.50 இலட்சம் மற்றும் கூடுதலாக 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகராட்சி பள்ளியின் கட்டிடங்களை நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் ஆவடி வட்டம் பருத்திப்பட்டு கிராமம் சரஸ்வதி நகர் குறிஞ்சி தெருவில் 11.08.2024 அன்று கழிவுநீர் தொட்டியினை சுத்தம் செய்த போது கோபி த/பெ சேகர் என்பவர் விஷ வாயு தாக்கி உயிரிழந்ததை தொடர்ந்து அவரது மனைவி திருமதி தீபாவுக்கு ரூ. 6 இலட்சம் வன்கொடுமையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு முதல் தவணைத் தொகைக்கான ஆணைகளையும் கூடுதல் நிவாரணம், அரசு வேலையில் இளநிலை உதவியாளருக்கான ஆணைகளும், தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர் என்பதன் அடிப்படையில் தாட்கோ மூலம் ரூ.5 இலட்சத்திற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி உள்பட மாநில மாவட்ட நிர்வாகிகள், அரசு துறை அதிகாரிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நகர் மன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர், கிளை கழக செயலாளர், கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திருநாவுக்கரசு நன்றி கூறினார்.

### வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் முன்னிலையில்

# மாதவரம் 16 வது வட்ட நிர்வாகிகள் – பாகமுவர்கள் கூட்டம்!

### புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, ஆக.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்ட திமுகழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் ஆண்டார்குப்பம் இ. கண்ணப்பன் இல்லத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் இ. அருள் தலைமை தாங்கினார்.

பகுதி கழக நிர்வாகிகள் கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி துணை செயலாளர் கே.சிவசங்கரன், பா. சந்திரன்,நா. மோகன் குமார் நாகூரார், பி. தரணி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஆலோசனைகளை வழங்கினார். வட்டத்தில் இதுவரை கொடுத்த ஓஎம்ஆர் படிவங்கள் போக மீதி உள்ள குடும்பவாரியாக உறுப்பினர்கள் பதிவு செய்யும் படிவத்தை உடனடியாக பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், வட்டத்தில் அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் பெறாதவர்களுக்கு பாகம் வாரியாக அவர்களிடம் சென்று விவரங்கள் சேகரித்து உதவிகளைப் பெற நிர்வாகிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் ராஜ் மோகன், சி.முத்தையா, கே.ஏ.ரமேஷ், புவனேஸ்வரி மகேஷ் குமார், குமரவேல், சாம்ராஜ், ஹேமந்த் குமார், வக்கீல் சுரேந்தர், கடப்பாக்கம் கிருபாகரன், ரிஷி குமார், நித்யானந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி சூரப்பட்டு மேட்டூர் பகுதியில் 32 அ வட்டத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று மூன்று இடங்களில் மின் மாற்றி (டிரான்ஸ்பார்மர்) மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் சுதர்சனம் தொடங்கி வைத்தார். உடன் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால், செயற்பொறியாளர் பாலச்சந்திரன், உதவி பொறியாளர் சதீஷ்குமார், மாமன்ற உறுப்பினர் புத்த கரம் இ.ஏழுமலை, வட்ட செயலாளர் துரை ஸ்ரீராமுலு, டி. சுந்தரம், எம்.சரவணன், பா.மாரிமுத்து, தே.ரமணன். சிவில் எம்.செல்வம், சி.ஹரிஷ் மற்றும் பொதுநல சங்க நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.